# இரண்டு வார்த்தை

கருணை - தயை - இதையெல்லாம் மனிதர்களிடத்தில் அபூர்வமாகத்தான் காணமுடியும். அதனால் கருணையுடைவர், தயையுடையவர் என்பதற்கு உதாரணமாக யாரையும் சொல்வதற்கு முடியவில்லை. எதிர்பார்ப்பு என்பது எல்லா மக்களிடையேயும் பரந்து விரிந்து உள்ளது. பணத்தைக் கொடுத்து, அதனோடு அதற்காக வட்டியை எதிர்பார்க்கும் வியாஜம் இதுவும் பரந்து உள்ளது. மனிதர்கள் தூங்கினாலும் வட்டி மாத்திரம் தூங்காமல் இருக்கும். உலகில் தூங்காத ஒன்று வட்டிதான். கடன் கொடுப்பவர்கள், கடனைத் திருப்பித்தர முடியாமல் தவிப்பவர்களின், பூர்வ ஜன்ம கர்மாவை இதை வைத்து எடைபோடலாம். சம்மந்தமே இல்லாத உலகில், கர்மாவானது சம்மந்தததை ஏற்படுத்திவிடும். கர்மம் நம்மை விடாது என்பதற்கு இதைக் காட்டிலும், வேறு எதை உதாரணமாக காட்டமுடியும்?

இதுபோலத்தான் வியாதியும். பூர்வகர்மாவை ஒட்டியே அனைத்தும் நம்மைத் தொடர்கின்றன. கர்மத் தொடர்பின் பலம் - இப்போது இந்த ஜென்மத்தில் நமக்கு பலவீனம். நாம் செய்த பல தோஷங்கள், இந்த ஜென்மத்தில் சந்தோஷமே இல்லாது செய்கிறது. இது பாவம் என்றுத் தெரிந்தும் செய்கின்ற துணிச்சலான பாவங்கள் மலைபோல் குவிந்து இருக்கின்றன. இது தவிர தெரியாமல் செய்கின்ற பாவம் வேறு.

இந்த பாவமூட்டைகளைத் தொலைப்பது எப்படி? மாறாக, இன்னும் சுமந்துக் கொண்டிருக்கிறோம். இப்படித்தான் செல்லவேண்டுமென விதித்தபாதையில் செல்லாமலிருக்கிறோம். குறுக்குப் பாதையில் போய் சறுக்கி விழுகிறோம். உடம்புக்கு சுகம் அளிக்கும் வஸ்துக்களையே நாடுகிறோம். உடம்பு ஆரோக்கியத்தை இழக்கிறது. மேலும் ஆத்மாவை உணராமல் தவிக்கிறது. சாஸ்திரங்கள், சடங்குகள் - இவற்றை வயதான காலத்தில் மதித்து என்ன பயன்?

கண் பார்வை சரியாகத் தெரிய, கண்ணாடிப் போட்டுக் கொள்ளலாம், காது கேட்கும் சக்தியை பெற எந்திரம் வைத்துக் கொள்ளலாம். பற்களைக் கட்டிக் கொள்ளலாம். நரைமுடியை மறைக்க கருப்பு மை தடவலாம். தோல் சுருங்கிப் போனால் என்ன செய்வது? சரீரம் ஆட்டம் கண்டால் கோலை ஊன்ற வேண்டும். இது பரவாயில்லை. ஆத்மாவின் நிலை என்ன? ஆத்மா பரிசுத்தமாக வழி என்ன? அடேயப்பா இது கஷ்டமான விஷயம். உடற்கூறுத் தெரிந்தால்தான் தேகத்தைப் பற்றி அறிய முடியும். 'ஞானம்' பிறந்தால்தான் ஆத்மாவைப் பற்றி தெரிந்துக் கொள்ள முடியும்.

ஞானம் பிறக்குமா? வயது எழுபது ஆனாலும் ஞானம் வந்துவிடுமா? கர்மத்தைத் தொலைத்துக் கட்ட முடியுமா? ஞானத்தைப் பெற முடியுமா?

இந்த ஜென்மத்தில் ஐஸ்வர்யத்தை பெறமுடியுமா? ரொம்பவும் கஷ்டமான விஷயம். ஆனால் மேற்சொன்னவற்றை பெற முடியும். ஸ்ரீவித்யா உபாசனையால் பெறமுடியும். கர்மத்தைத் தொலைக்கலாம். துன்பத்தை ஓட்டலாம். ஞானத்தைப் பெறலாம். சாசுவத ஐஸ்வர்யத்தைப் பெறலாம்.

ஸ்ரீவித்யா உபாஸனை மூலம் எதை வேண்டுமானாலும் பெறலாம். எல்லாம் ஆதிபராசக்தியான லலிதாதேவியினிடத்தில் அடக்கம். ஸர்வமும் அவளது இச்சைக்குக் கட்டுப்பட்டவை. ஸகலத்தையும் அந்த புவனநாயகி அருளுகிறாள். இந்த அகிலாண்ட நாயகியின் தயவிருந்தால் தானாய் எல்லாம்

நம்மை வந்தடையும். ஏனெனில் தயை - கருணை உடையவள் இவள் ஒருத்திதான். அப்படி சொல்வதுக்கூட சரியல்ல. கருணையின் மொத்த உருவம் - கருணையே இவள்தான். அதனால் தான் வேறு யாரையும் கருணையோடு ஒப்பிட முடிவதில்லை. அம்மா! என்று அழைத்தால் அன்பு கிடைக்கும். அன்புடனே சொல்லிப் பார்த்தால் நல்ல புத்தி கிடைக்கும்! லலிதா தேவியின் சாம்ராஜ்ய கோட்டையான ஸ்ரீநகரத்தில் நுழைந்தால் ராஜமாதங்கியும், வாராஹியும் நம்மை அரவணைப்பார்கள். பாலாதேவி நமக்கு உற்சாக மூட்டுவாள். அங்குள்ள அத்தனை ஸ்ரீநகர தேவிகளும் நம்மைப் பார்த்து மெச்சுவார்கள். ஸர்வலோக ஜகன்மாதாவான மாதா லலிதாவிடம் நம்மைப் பற்றிச் சொல்வார்கள். நமது பிறவியை அறுக்க சிபாரிசு செய்வார்கள். இந்தப் பிறவியில் என்னென்னத் தேவைகளோ அவற்றை நமக்குத் தெரியாம லேயே தந்து விடுவார்கள்.

அனுதினமும் அவளது திருமந்திரம் ஓதிடல் வேண்டும். அவளது திருவடி சிந்தனையில் பதியவேண்டும். இந்த உலகம் அவளதுத் தோற்றமே என எண்ண வேண்டும். ஸ்ரீ சக்ர வழிபாடு செய்தல் வேண்டும். நாம் ஸ்ரீ சக்ர வழிபாடு செய்ய சுற்றியுள்ள சூழலும், குடும்பமும், நட்பும் அனுகூலமாய் இருக்கவேண்டும். பக்தியும் பிரேமையும் மாதாவிடத்தில் எப்போதும் இருக்கவேண்டும். எல்லாவற்றிற்கும் மேலாக குருபிரான்களின் ஆசிவேண்டும். குருபிரான் பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகளின் கிருபையினால் அன்னையின் வழிபாடும், அதனால் அருளும் எளிதாய் கிட்டிவிடும்.

பரமஹம்ஸ ஸ்ரீமத் புவனேஸ்வரி ஸ்வாமிகளின் திருவருள் நோக்கால் ''ஸ்ரீசக்ரம், ஸ்ரீநகரம், ஸ்ரீவித்யா'' புத்தகம் மலர்ந் துள்ளது. ஸ்ரீவித்யா - இந்த ஸாகரத்தில் ஒரு சிறு நீர்த் துளிப் போன்ற விஷயம் மட்டுமே இப்புத்தகத்தில் அடங்கியுள்ளது. பலபேருக்கு இது உதவிட வேண்டும் என்ற நல்லிதயம் கொண்டு தன்னை தெய்விகத்தில் முழுமையாய் ஈடுபடுத்திக் கொண்டு அச்சிட்டு வெளியிட்டிருக்கிறார்கள் மதி நிலையத்
அவர்கள்.

**ஸ்ரீ சக்ர விளக்கம்**

**ஸ்ரீ நகர விளக்கம்**

ஜகன்மாதா லலிதா தேவியின் அற்புதம், பெருமை யாவ
விளக்கப்பட்டுள்ளன. பார்ப்பதற்கு எளிதாய் வண்ணத்
வரைபடங்கள் நம்மை மேலும் ஆராதனை செய்யத் தூண்டு
வகையில் இருக்கிறது. எல்லாம் வல்ல தேவி சர்வானந்தம
சக்கரத்தில் இருந்துக்கொண்டு 'ஸர்வானந்தத்தையும்' நீங்க
செல்வத்தையும் இப்புத்தகம் வைத்திருப்போரின் இல்லத்
வர்ஷிக்க வேணுமென ஸ்ரீபுவனேஸ்வரி ஸ்வாமிகளி
திருவடியை சிந்தித்துக் கொண்டேயிருக்கிறேன்.

ஸ்வாமி திருவடிய

ஸ்வாமி பரத்வா

இப்புத்தகத்தில், ஸ்ரீசக்ரம், ஸ்ரீநகரம் - வண்ணப் படங்கள் இணைக்கப்பட்டுள்ளன. இதை கண்ணாடி பிரேம் போட்டு பூஜையறையில் வைத்து பூஜித்து வர, எல்லா ஐஸ்வர்யங்களும், அம்பிகையின் அனுக்ரஹத் தால் ஏற்படும்.